## சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை – சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 3 பணிகள் – மாநில அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் குழுவின் பரிந்துரையின் படி உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியில் மேற்கொள்ளுதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு1) துறை

அரசாணை (நிலை) எண். 118 நாள் : 28–06–2012

திருவள்ளுவர் ஆண்டு 2043, ஆனி– 14 ம் நாள்.

படிக்கவும்:

நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), கடித எண். 999/2011/ஏஇ।/நாள் 23.08.2011.

******

**ஆணை:**

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள்) அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புக்கிணங்க மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு மேம்பாலம், 8 பாலங்கள், 5 பாதசாரிகள் சுரங்க நடைபாதைகள் மற்றும் ஒரு ஆகாய நடைபாதை அமைக்கும் பணிகளுக்கு மாநில அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் குழுவின் நிதியிலிருந்து ரூ. 109.00 கோடி மதிப்பிற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. 21.12.2011 அன்று நடந்த கூட்டத்தில் மாநில அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் குழு ரூ.109.00 கோடி மதிப்பீட்டிற்கான திட்டப்பணிகளுக்கு ஒப்புதல் அளித்தது.

3 அதனடிப்படையில் நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்கள், சென்னை பெருநகரப் பகுதியில் போக்குவரத்துக் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து அறிவித்துள்ள கீழ்காணும் பணிகளுக்கு ரூ.109.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு அரசைக் கோரியுள்ளார்.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1) | ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்து நுழைவு வாயில் சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல். | 40.00 |
| 2) | 8 இடங்களில் பாலங்கள் கட்டுதல் | |
| i | பெரியார் ஈ.வெ.ரா சாலையில், அமைந்தகரை அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே கூடுதல் மூன்று வழித்தட பாலம் அமைத்தல். | ரூ. 8.00 |
| ii | மவுண்ட் – பூவிருந்தவல்லி ஆவடி சாலை (மா.நெ.55) கி.மீ 3/4.ல் பாலம் அகலப்படுத்துதல் | ரூ. 1.00 |
| iii | மவுண்ட்–பூவிருந்தவல்லி ஆவடி சாலை (மா.நெ.55) கி.மீ 15/8ல் கூடுதலாக இரண்டு வழித்தட பாலம் அமைத்தல் | ரூ. 5.00 |
| iv | சிங்கப்பெருமாள் கோயில் –ஸ்ரீ பெரும்புதூர் – திருவள்ளூர் – செங்குன்றம் சாலை கி.மீ 62/2ல் (மா.நெ. 57) கூடுதலாக இரண்டு வழித்தட பாலம் அமைத்தல் | ரூ. 2.00 |
| v | காரனோடை மீஞ்சூர் சாலை கி.மீ 14/4–14/8 ல் உயர்மட்ட பாலம் அமைத்தல் | ரூ. 9.00 |
| vi | தாம்பரம் முடிச்சூர் ஸ்ரீ பெரும்புதூர் சாலை கி.மீ 16/6ல் மூழ்கு பாலம் அமைத்தல் | ரூ. 2.00 |
| vii | சென்னை கோடம்பாக்கம் ஸ்ரீபெரும்புதூர் சாலை கி.மீ 13/8ல் மூழ்கு பாலம் அமைத்தல் | ரூ. 2.00 |
| viii | சென்னை கோடம்பாக்கம ஸ்ரீ பெரும்புதூர் சாலை கி.மீ 27/6 மூழ்கு பாலம் அமைத்தல் | ரூ.1.00 |
| 3) | 5 இடங்களில் பாதசாரிகளுக்கு ஏதுவாக சுரங்க நடைபாதைகள் (Pedestrian Subways) மற்றும் ஒரு நடை மேம்பாலம் (Sky Walk கட்டுதல்) | |
| i | அண்ணா சாலையில் சின்னமலை ஏ.ஜி.தேவாலயம் அருகில் சுரங்க நடைபாதை அமைத்தல். | ரூ. 3.50 |
| ii | ஜி.எஸ்.டி. சாலையில், கிண்டியில், எம்.கே.என். சாலை சந்திப்பு அருகில் சுரங்க நடைபாதை அமைத்தல். | ரூ. 3.50 |
| iii | ஜவஹர்லால் நேரு சாலையில் | ரூ. 3.50 |

| | | |
|---|---|---|
| | (உள்வட்ட சாலை) கி.மீ 1/6ல் ஈக்காடுதாங்கல் மல்லாடி நிறுவனம் அருகில் சுரங்க நடைபாதை அமைத்தல். | |
| iv | ஜவஹர்லால் நேரு சாலையில் (உள்வட்ட சாலை) கி.மீ 2/7ல் காசிதிரை அரங்கம் அருகில் சுரங்க நடைபாதை அமைத்தல் | ரூ. 3.50 |
| v | ஜவஹர்லால் நேரு சாலையில் (உள்வட்ட சாலை) கி.மீ 7/7ல் கோயம்பேடு புறநகரப் பேருந்து நிலையம் அருகில் சுரங்க நடைபாதை அமைத்தல் | ரூ. 5.00 |
| i. | **ஆகாய நடைபாதை (Sky Walk)** ஈ.வெ.ரா சாலையில் சென்ட்ரல், பூங்கா, சுரங்கப்பாதை மற்றும் பொது மருத்துவமனை பகுதிகளை இணைத்து ஆகாய நடைபாதை அமைத்தல் | ரூ. 20.00 |
| **மொத்தத் தொகை** | | **109.00** |

4. நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து அவ்வாறே அதனை ஏற்று, சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேலே பத்தி 3 ல் கண்டுள்ள பணிகளுக்கு மாநில அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் குழுவின் பரிந்துரையின் படி உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ள ரூ. 109.00 கோடிக்கு (ரூபாய். நூற்று ஒன்பது கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. இப்பணிக்காக மேலே பத்தி – 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண். 21–10ன் கீழ் துவக்கப்பெற்ற கீழ்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

5054– சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 80– பொது– 800– ஏனைய செலவு – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – KJ - மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) நெடுஞ்சாலைத் துறை அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் 16. பெரும் பணிகள்.

(து.தொ.கு. 5054–80–800– KJ- 1603)

6. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண். 21–10 ன் கீழ் துவக்கப்பெற்ற கீழ்காணும் புதிய கணக்கு தலைப்பின் கீழ் மாற்றம் செய்யப்பட வேண்டும் :–

5054– சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 80 பொது – 797 சேமநிதி மற்றும் வைப்பீட்டுக் கணக்குகளிலிருந்து மாற்றப்பட்டவை – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JB- மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதிக்கு தொகை மாற்றம் – 30 – கணக்குகளிடையே மாற்றம் (து.தொ.கு. 5054–80–797– JB-3009) இத்தொகை J சேம நிதிகள் – (b) வட்டி பெறாத சேம நிதிகள் – 8229.00 வளர்ச்சி – நல நிதிகள் – 200 ஏனைய வளர்ச்சி நலநிதி AZ.மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி

(கு.தொ.கு. 8229–00–200– AZ -000F) வரவு என்பதன் கீழ் எதிர்வரவு வைக்கப்பட வேண்டும்.

7. மேற்காணும் பணிக்காக வழங்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் கழித்து நேர்செய்யப்படும்.

2217– நகர்ப் பகுதி வளர்ச்சி – 05– ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் – 902 – கழிக்கவும் – உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JB- மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 – கணக்குகளிடையே மாற்றம் (கு.தொ.கு. 2217–05–902– JB -3001); இத்தொகை J சேம நிதிகள் (b) வட்டி பெறாத சேமநிதிகள் 8229.00 வளர்ச்சி நலநிதிகள் – 200 ஏனைய வளர்ச்சி நலநிதி – AZ. மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (கு.தொ.கு. 8229–00–200– AZ -0005) செலவு என்பதன் கீழ் எதிர்பற்று வைக்கப்படவேண்டும்.

8. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “புதுப் பணிகள் (New Service)” குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு– செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு– செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (பொதுப்பணி–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலும் மாநில கணக்காயர், சென்னை – 18 அவர்கள் கணக்குகளிடையே மாற்றத் தொகையில் 2012–13 ஆம் நிதியாண்டு முடிவில் உரிய சரிகட்டல் மேற்கொள்ள உரிய விவரங்களை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்கள் கோரப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண் 411/JS(PU)/12,PW-I/2012 நாள் 15.06.2012 ன் படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.421 ( நானூற்று இருபத்து ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கி. ராமசந்திரன்
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 16.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை– 2

நகல்:–
நிதி (பொ.ப.I / வ.செ.பொது I) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி)அவர்களின், நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்)
அவர்களின், நேர்முக உதவியாளர், சென்னை–9.
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் அவர்களின்
தனிச்செயலர், சென்னை–9
அனைத்து திட்டப்பிரிவுகள் நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை,
சென்னை–9.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.